# CHAPTER – 38

# திருவிந்தளூர் கல்வெட்டு மற்றும் செப்பேட்டுச் செய்திகள் – ஓர் ஆய்வு

**முனைவர் ந. அறிவழகன்**
உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை,
அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி), சேலம் – 636007

**முன்னுரை**

தமிழ்நாட்டில், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் மயிலாடுதுறையிலிருந்து ஆனைதாண்டவபுரம் செல்லும் சாலையில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலும் திருவிந்தளூரின் உட்கிராமமான கக்காணி முட்டம் என்ற பகுதியில் பிற்காலச் சோழர் காலத்தில் கட்டப்பட்ட கைலாசநாதர் கோயில் உள்ளது. தமிழக அரசின் இந்துசமய அறநிலையத்துறை மூலம் அக்கோயிலில் முன் மண்டபம் கட்டும் பணிக்காக நிலத்தைத் தோண்டிய போது பன்னிரண்டு அடி ஆழத்தில் செப்புத் திருமேனிகள், பூசைப் பொருள்கள், இசைக் கருவிகள், சோழர் காலத்தைச் சார்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த செப்பேடுகள் ஆகியவை 20–05–2010 அன்று கண்டெடுக்கப்பட்டன.

கணபதி, சோமாஸ்கந்தர், தேவியுடன் சந்திரசேகர், சண்டிகேஸ்வரர், காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், பரவை, சங்கிலியாருடன் சுந்தரர், மாணிக்கவாசகர், அஸ்திரதேவர் ஆகிய செப்புத் திருமேனிகளும், ஒரு குத்துவிளக்கின் தலைப்பகுதி, இரு கெண்டிகள், இரு காளங்கள் ஆகியனவும் இருந்தன.

இங்கு கிடைத்த செப்பேடு 85 ஏடுகளைக் கொண்டதாய், அரசமுத்திரையுடன் கூடிய 2.5 செ.மீ கனமும், 50 செ.மீ விட்டமும் கொண்ட பெரிய வளையத்தில் கோர்க்கப்பட்டுப் பிரிக்கப்படாத நிலையில் இருந்தது. பொதுவாகச் செப்பேட்டு முத்திரைகளில் உள்ள சின்னங்கள் புடைப்பாக அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் பொட்டு முத்திரையில் உருவங்கள் குழிவாகச் செதுக்கப்பட்டுள்ளன. நடுவில் வலப்புறம் கூடிய நெடிய வில், இவற்றிற்கு இருபுறமும் குத்து விளக்குகள், மேலே நடுவில் வெண்கொற்றக் குடை, அதன் இருபுறமும் சாமரம் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இம்முத்திரை 11 செ.மீ விட்டமும், 2 செ.மீ கனமும் கொண்டதாகும் இவ்வளையத்தில் 85 செப்பேடுகள் கோபப்பட்டுள்ளன என்று எழுதப்பட்டிருப்பினும், தற்போது இத்தொகுப்பில் 85 செப்டுகளே உள்ளன. முதல் செப்பேடு காணக் கிடைக்கவில்லை. இதன் எடுகள் ஒவ்வொன்றும் 44 செ.மீ நீளமும் 21 செ.மீ அகலம் உடையதாய் மொத்த எடை 150 கிலோவாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

இச்செப்பேட்டு முத்திரையின் விளிம்புப் பகுதியில்

> "ஸ்ரீமச்சாசனம் ஊர்வி சசிரோபிஹி சேகர் கருதம் ஏந்த் இராஜேந்திர தேவஸ்யபாரகேனரி வாமணன"

என்று கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளன. இதன் பொருள் : "இராசேந்திர தேவன் என்கிற பரகேசரிவர்மனின் இந்தத் தர்மம் உலகத்தின் (பின்வரும் அரசர்களின் உச்சியின் மீது வைக்கப்படுகிறது" என்பதாகும்.

தற்போது 85 செப்பேடுகளுடன் காணப்படும் இத்தொகுப்பில் ஒன்று முதல், ஒன்பதாம் ஏட்டின் பின்பக்கம் இரண்டாம் வரியின் பகுதி வரை கிரந்த எழுத்தில் சமஸ்கிருதப் பகுதியும், அதன்பின் இறுதிச்செப்போடு வரை தமிழ் எழுத்தில் தமிழ்ப்பகுதியும் எழுதப்பட்டுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு கட்டிலும் இடதுபுறம் வளையத்தினைக் கோர்பதற்கு உரிய 3 செ.மீ அளவுள்ள அளவுள்ள துளையை ஒட்டியவாறு எண் இடப்பட்டுள்ளது. கிடைத்திருக்கும் முதல் ஏட்டின் எண் இரண்டில் தொடங்கி 86 வரை தொடர்ச்சியாக எண் இடப்பட்டுள்ளது. தமிழ்ப்பகுதியில் ஒரு ஏட்டின் ஒரு பக்கத்தில் குறைந்த அளவாக 20 வரிகளும், அதிக அளவாக 30 வரிகளும் எழுதப்பட்டுள்ளன. அதற்கேற்ப எழுத்துக்கள் முறையே பெரியதாக சிறியனவாகவும் அமைந்துள்ளன. கிடைத்திருக்கும் முதல் ஏட்டின் வலது கீழ் மூலையில் சிறிது உடைந்துள்ளதால் வரிகள் 13 முதல் 19 வார இறுதியில் சில எழுத்துக்கள் கிடைக்கவில்லை. இவ்வேட்டின் நடுவிலும் ஒரு பிளவு காணப்படுகிறது. இருப்பினும் இணைந்தே உள்ளது. சோழ மன்னர்கள் முதலாம் இராஜாதிராஜனாலும், இரண்டாம் இராஜேந்திரனாலும் வெளியிடப்பட்ட ஆணைகளைத் தாங்கியதாய், வீரராஜேந்திரன் காலத்தில் எழுதப்பப்பட்டதாய் கிடைத்திருக்கும் முதல் செப்பேடு என்ற பெருமைக்குரியது.

இச்செப்பேடு மேலும் இரு மன்னர்களின் ஆனைகளும் இணைக்கப்பட்டு, ஒரே தானமாக வழுங்கப்பட்டதைக் குறிக்கும் செப்பேடாகவும் விளங்குவதும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் ஏன் இந்தியாவிலேயே கிடைத்துள்ள செப்பேடுகளில் பெரிய செப்பேட்டுத் தொகுதியாக இதுவரை கருதப்பட்ட முதலாம் இராஜந்திரசோழனின் 57 ஏடுகளைக் கொண்ட கரந்தைச் செப்பேட்டுத் தொகுதியைவிட அளவிலும், ஏடுகளின் எண்ணிக்கையிலும் இத்தொகுப்பு மிகப்பெரியதாக விளங்குகிறது. மேலும் செப்பேடுகளை இணைக்கும் வளையத்திலேயே "இவ்வளையத்தில் கோத்த ஏடுகள் எண்பாத்தாறு" என்று எழுதப்பட்டிருப்பதும் இச்செப்பேட்டின் தனிச்சிறப்பாகும்.

### செப்பேட்டின் முக்கிய சிறப்பு செய்திகள்

வடதிசைக் கங்கையும் தென்திசை இலங்கையும் குடதிசை மகாமகம் குணதிசைக் கடாரமும் வெற்றி கொள்ளப்பட்டு தன் தந்தையின் ஆட்சியின் கீழிருந்த பகுதிகளைத் தனது குடைக்கீமும் தொடர்ந்து நிலைநிறுத்தியதை முதலாம் இராஜாதிராஜனின் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. இவன் இராஜேந்திர சோழனுக்கும் அவனது அரசியார் சுத்தமல்லிக்கும் பிறந்த நான்கு மகன்களில் முதலாமவன், தந்தை முடி சூடிய கி.பி. 1012–க் குப்பின் ஆறு வருடங்களிலேயே (கி.பி 1018) இவனுக்கும் முடி சூட்டப்பட்டிருக்கிறது. தந்தையின் ஆட்சியில்

நடந்த பெரும் போர்களில் எல்லாம் இவனும் பெரும் பங்காற்றியிருந்தா போடும். இவனது போர் நடவடிக்கைகள் பற்றித் தமிழ்நாட்டுக் கல்வெட்டுகளும் செப்பேடுகளம் மட்டுமின்றி இலங்கை வரலாற்றைக் கூறும் மகாபவம்சமும் குறிப்பிடுகின்றது. இவள் இலங்கை மன்னனாகிய விக்கிரம பாகுவையும், விக்கிரம பாண்டியனையும் வெற்றிபெற்றிருக்கிறான். முதலாம் இராஜராஜனைப் போலவே, முதலாம் இராஜாதிராஜனும் சேரநாட்டுக் காந்தளூர்ச் சாலையை தர மறுத்திருக்கின்றான். இப்போர்களெல்லாம் இவன் தந்தையின் ஆட்சிக்காலத்தில் இவனால் நிகழ்த்தப் பெற்றவை.

இவன் தந்தை இராஜேந்திரசோழன் கி.பி.1043–இல் இறந்தபின் சோழப்பேரரசின் கீழ் பலநாடுகள் இருந்த காரணத்தினால், எந்நேரத்திலும் எந்நாட்டு மன்னரும் எழுச்சி பெற்றுத் தம் நாட்டை மீட்க முற்படுவர் என்பதால், தொடர்ந்து அந்நாடுகளைப் பேரரசின் கீழ் தக்க வைத்துக் கொள்ளவும், சோழ இளவரசர்கள் நிர்வாகப் பொறுப்பில் அனுபவம் பெறவும், ஒவ்வொரு நாட்டிற்கும் ஒருவர் என நியமித்து ஆட்சி செய்யும் பணி அதிகாரப் பகிர்ந்தளிப்பைச் செய்திருக்கிறான் முதலாம் இராஜாதிராஜன். அவ்வகையில் தனது உறவினர்கள், தம்பியர், மகள்கள் ஆகியோரை முக்கிய பகுதிகளில் நாடுகளில் பொறுப்பாளர்களாக நியமித்துக் கூட்டாட்சி போன்றதொரு ஆட்சியைச் செய்திருக்கின்றான். இவர்களில் அடுத்த அரசனாக முடி சூடும் பொறுப்பிலுள்ள மூத்த இளவரசனைப் பாண்டி நாட்டு நிர்வாகப் பொறுப்பில் அமர்த்தி, அவனை ஆட்சிப் பொறுப்பிலும் நாட்டுப் பொறுப்பிலும் சிறந்த அனுபவம் மிக்கவனாக மாற்றி அமைத்திருக்கின்றான் முதலாம் இராஜாதிராஜன்.

ஆட்சியேற்றபின் அவன் காலத்தில் நடந்த போர்களும், மிகவும் முக்கியமானவை மேலைச் சாளுக்கியரோடு நடந்த நான்கு பேர்களாகும். (The Cholas K.A.N.Susri pp. 253–257).

முதற்போர், கம்பிலிப்போர். இவனது 29 –ஆம் ஆட்சியாண்டில் சாளுக்கிய சோமேஸ்வரனுடன் இப்போர் நடந்திருக்கிறது. பெல்லாரி மாவட்டம் துங்கபத்திரை ஆதிகாரையில் சப்பேட்டைக்கு அருகிலுள்ள ஊர்தான் கம்பீலி, சாளுக்கியருடன் இந்தா அது வெற்றி கொண்டது முதலாம் இராஜாதிராதான தாவமையிலான சோழப்படை.

இரண்டாவது போர், பூந்தூர் மற்றும் மண்ணப்பை ஆகிய ஊர்களில் நடைபெற்றது. கடகமாநகர் என்று கூறப்பட்ட படைவீடாக அமைந்திருந்த பூந்தாரைச் சோழட்படை ஒழித்துச் சாளுக்கியனது சிற்றரசனாக விச்சயனை வென்றது. கடக மாநகரத் தரைமட்டமாக மேதை கொண்டுமுது சுவடி விதைக்கப்பட்டது. மண்ணைப்பை என்ற நகரிலுள்ள அரண்மனை தீக்கிரையாக்கப்பட்டது. சாளுக்கியனின் யானைப்படையைப் பிடித்து முத்துறைகளில் நீராட்டிக் குன்றுகளிலெல்லாம் புலிக்கொடி பொறித்து பெற்றுத்தான் நாட்டினர் சோழப்படை வீரர்கள். அடுக்கியான் பழம்பெரும் கருங்கள். சோழப்படையால் கைப்பற்றப்பட்டன. எதிரிப்படையுடன் சேர்ந்து போரில் பங்காற்றிய நுளம்ப, காளிதாசர், சாமுடன், கொம்மயள், வில்பவராள், சஜா மன்னர் ,ஆகியோரை அடக்கியது சோழப்படை,

மூன்றாவது போர், கல்யாணடரத்தில் நடந்தது. அவனது 33ஆம் ஆட்சியாண்டிற்கு முன்னரே இப்போர் நடந்திருக்கிறது. போர் தொடங்குவதற்கு முன்னரே சாளுக்கிய மன்னன்

ஆஹமெல்வன் தூதுவன் ஒருவனுடன் இருவரை அனுப்பிச் சமாதானத்திற்கு முயற்சி செய்தான். அப்போது தூதுவனுடன் வந்த இருவரில் ஒருவருக்குப் பெண்ணுடை அணிவித்தும், மற்றவனுக்கும் மொட்டையடித்து ஐங்கருடும் வைத்தும், இருவருக்கும் ஆகவமல்லி, ஆகவமல்லன் என்று பெயரிட்டும் தூதுவனுடன் திருப்பி அனுப்பினர் சோழப்படையினர். தொடர்ந்து 8111க்கியரது பழைய நகரான கல்யாணபுரம் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது. அங்குள்ள அரண்மனை இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. அந்நகரை வென்ற முதலாம் இராஜாதிராஜ சோழன், 'விசைய செய்து கொண்டான் என்பதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ராஜேந்திரன்' என்ற சிறப்புப்பெயரைத் தனதாக்கிக் கொண்டு அங்கு வீராபிஷேகமும், கல்யாணபுரத்தின் மீது அவன் கொண்ட இந்த வெற்றி மாபெரும் வெற்றியாகக் கருதப்பட்டது. அந்த வெற்றியின் நினைவாகக் கல்யாண்டரத்திலிருந்து இராஜாதிராஜன் துவாரபாலகர் சிலையொன்றினைச் சோழ நாட்டிற்குக் கொண்டு வந்திருக்கின்றான். அச்சிலையின் பீடத்தில் பின்வரும் இருவரி கல்வெட்டு உள்ளது.

1. வஸிஸ்ரீ உடையார் ஸ்ரீவிஜயராஜெகமெவர்
2. கல்யாணபுரமெறிந்து கொடுவகை துவாரபாலகர் இவர்

என்பது தான் அக்கல்வெட்டு வரிகள், பெற்ற வெற்றியையும் சூட்டிக் கொண்ட பெயரையும், கொண்டு வந்த சிலையையும் இருவாரிகளிலேயே தெரிவிக்கும் கல்வெட்டைட் தாங்கிய சிலை இங்குக் குறிப்பிடத்தக்கது.

கல்யாணபுர வெற்றியின் நினைவாகப் பாடல் பெற்ற தலமாக விளங்குகின்ற தஞ்சாவூர் மாவட்டம் திருவீழிமிழலை என்ற ஊரிலுள்ள சிவன் கோயிலுக்குப் பொன் வேடப்பட்டிருக்கிறது. இச்செய்தியைக் குறிப்பிடும் கல்வெட்டு, இராஜாதிராசாள அவம்'' கல்யாணடாரப் போர் வெற்றியின் போது சூட்டிக்கொண்ட விஜைய ராஜேந்திரன் என்ற பெயராலேயே அழைக்கிறது. 36 ஆம் ஆட்சியாண்டைச் சேர்ந்த இக்கல்வெட்டே இவனது கடைசி ஆட்சியாண்டைக் குறிப்பதாகவும் அமைகிறதென்பதும் குறிப்பிடட்தக்கது. முதல் முக்கிய மெகள் நடந்து முடிந்த பின்னர் செய்த தானத்தைப் பற்றித்தான் இத்திருந்தால் செப்பேட்டின் முதற்பகுதி பேசுகிறது.

இறுதி ஆட்சியாண்டில் இம்மன்னன் மேற்கொண்ட நான்காவதுப் போர், தன் கொப்பத்துப் போர், கிருஷ்ணா நதிக்கரையிலுள்ளது கொப்பம். இவ்வூரில் சாளுக்கிய எதிர்த்துச் சோழப்படைப் போரிட்ட போது, மன்னன் முதலாம் இராஜராஜன். பொருந்தான், இதுவரை சாளுக்கியருடன் நடைபெற்ற போர்களில் எல்லாம் இந்த மாபெரும் வீரன் பெரும் வெற்றி பெற்றிருக்கிறான். அடுத்த நகரங்களும் எரியூட்டப்பட்ட அரண்மனைகளும், புலிக்கொடி பொறித்து நாட்டிய வெற்றித் தூண்களும் பலப்பல ஆதலால் இப்போரிலும்; இவ்வீரமன்னனே வெல்லுகின்ற வாய்ப்புகள் அதிகம் கான்றெண்ணியதால் சாளுக்கியப் படையிலர் மன்னன் இராஜாதிராஜனைய குறிவைத்துப் போரிட்டு காயத்தை ஏற்படுத்தினர். காயத்தின் காரணமாக யானை மீது அமர்ந்து. போர்ரிட்டவாறே உயிர்விட்டான். மாபெரும் வீரனும் போர்க்கலையில் வல்லவனும் களங்கால் பதில் ஈடு இணையற்ற வீரனுமான முதலாம் இராஜாதிராஜ சோழன்.

இவன் தமிழ்ப்பாக கொண்டவன்; 'ஆனைமேல்துஞ்சின தேவர்' எனச் சிறப்பிக்கப்பட்டவன்; கல்யாணபுரமெனும் தொன்னகரைத் துகளெழ அழித்தவன், சீர்கெழு'

விசுவலோகத்து விளங்கு மனுநெறி நின்று அஸ்வமேதகு செய்து அரைச, வீற்றிருந்த ஜெயங்கொண்ட சோழன்; கல்யாணபுரங் கொண்ட சோழன், ஜயசிம்மகுலகாலன், ஆகவமல்ல குலாந்தகன் போன்ற பெயர்களைப் பெற்றதுடன் நாட்டுப் பிரிவுகளுக்கும் அப்பெயர்களை இட்டு மகிழ்ந்தவன். அத்தகு வீரன் வீரமரணமடைந்தபோது, அந்தரவானத்து அரம்பையர் எதிர்கொண்டு இந்திரலோகம் அழைத்துச் சென்றனர் என்று கூறுகிறது. இவனது தம்பி இரண்டாம் இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்திப் பகுதி, மிகச்சிறந்த போராற்றல் பெற்றிருந்த மன்னன் வீர மரணம் அடைந்தவுடம் சோழ நாட்டுப் படையினர் சிதறிப் போவதைக் கண்டு, 'அஞ்சல் அஞ்சல்' எனக் கூறிக்கொண்டு, தனது பாகைள மீதேறி விரைந்து, ஒரு கூற்றவன் போல வந்து, தம் படையினருக்குப் போர்க் கருவிகள் வழங்கி போரிடச் செய்து, சாளுக்கியப் புலிகேசியையும், அவன் தம்பி, சயசிர்கனையும், தசபன்மன்னையும், நுளம்பனையும், இன்னும் எண்ணற்ற அரசர்களைளயும், பெரும் விரர்களையும், அரிதி தனது அண்ணன் வியப்பகம் சென்று சேருமுன்னே விண்ணுலகத்திற்கு ஏற்றினான் இவன் தம்பி இரண்டாம் ராஜேந்திரன்.

எதிரியின் ஆயுதங்கள் தனது யானையின் முகத்திலும் தனது தோளிலும்தொடையிலும் தாக்கிக் குருதியையும் புண்ணையும் ஏற்படுத்தின என்றாலும், அப்போரில் வென்று இரட்டபாடி ஏழரையிலக்கம் உள்ளிட்ட பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டு, செப்புக்கல் ஜயஸ்தம்பம் நாட்டினார் இரண்டாம் இராஜேந்திரன். ஆகவமல்லன் பயந்தோடியோன். அவனது ஆனை, குதிரை, பெண்டிர் பண்டாரம் அனைத்தையும் கவர்ந்து கொண்டு வந்தான் சோழன். அந்தப் போர்க்களமாகிய கருங்களத்திலேயே விஜயாபிசேகம் செய்து கொண்டு கங்காபுரிக்குத் திரும்பினான். கொப்பத்துப் போரில் இரண்டாம் இராஜேந்திரன் பெற்ற வெற்றியைக் கொண்டாடும் பாகையில் ஒரு மாபெரும் தானம் செய்யப்பட்டது. நிகுவிந்தளூர்ச் செப்பேட்டின் அடுத்த பகுதி அமைகிறது.

## முதலாம் இராஜாதிராஜனின் அறக்கொடை செப்பேட்டு செய்திகள்

முதலாம் இராஜாதிராஜன், அவன் தம்பி இரண்டாம் இராஜேந்திரன் ஆகியோர் முறையே சுல்யாணடரட்டோர் வெற்றிக்குப் பின்னர், கொப்பந்துப் போர் வெற்றிக்குப் பின்னும் அளித்த இருபெரும் பிரம்மதேயம் கொடைகளையே திருவிந்தளூர்ச் செப்பேடு குறிப்பிடுகின்றது. இரு அரசர்களின் நேர்முக ஆ களும் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டாலும், இனவிரு கொடைகளும் ஒன்றாக்கப்பட்டதால் ஒரே செப்பேடாக எழுதி வழங்கப்பெற்றுள்ளது. தமையன் முதலாம் இராஜாதிராஜன் அளித்த அறக்கொடையோடு மேலும் பல ஊர்களையும் இணைத்துப் பயன்பெறுவோரையும். அதிகமாக்கி வழங்கியுள்ளான் தம்பி இரண்டாம் இராஜேந்திரன். இராஜாதிராஜன் அளித்த அறக்கொடை பற்றிய அனைத்து விவரங்களையும் விரிவாகக் கூறுகிறது. முதற்பகுதி (19ஆம் ஏட்டின் பின்பக்க வரி) அதன்படி அரசன் தனது 35ஆவது ஆட்சியாண்டின் 40 ஆம் நாளில் முடிகொண்ட சோழபுரத்தில் (பழையாறை) இராசாதிராஜன் என்னும் அரண்மனையிலமைந்த இராசேந்திரசோழன் என்னும் பகுதியில் உள்ள கீழைச் சோபானம் என்னுமிடத்தில் விஜையராஜேந்திரக் காலிங்கராஜன் என்னும் அரச இருக்கையில் அமர்ந்து இவ்வாணையினை வெளியிட்டுள்ளான். திருவிந்தளூர் நாட்டு நாட்டார், பிரம்மதேயக் கிழவர்கள், தேவதான, பள்ளிச்சந்த, கணிமுற்றூட்டு, வெட்டிப்பேறு, பழவறச்சாலகபோக உரிமையாளர்களுக்கு இவ்வாணை அனுப்பப்பட்டுள்ளது.

இவனது 33 ஆம் ஆட்சியாண்டியிருந்து முன் தேதியிட்டு நடைமுறைப்படுத்துமாறு கூறப்பட்ட இவ்வாணையின்படி, இராஜாதிராஜ வளநாட்டில் அமைந்த திருவிந்தளூர் நாட்டிற்குட்பட்ட, தத்தமங்கலம், கூத்தார், பஞ்சவன் நல்லுரா், கரம்பைக்குடி, மநாகுடி, கீழ்நாகன்குடி, கொற்றநல்லூர், திருவிந்தளூர் ஊரோடு இணைக்கப்பட்ட ஒரு பகுதி நிலத்தை நீக்கிய பின்னுள்ள பெரியன்குடி, திருவிந்தளூரின் ஒரு பகுதி நிலம் ஆகிய ஒன்பது ஊர்களையும் இணைத்து, ஒரே ஊராக்கி, ஒரே வரிக்கணக்கின்கீழ் கொணர்ந்து பழைய பெயர்களை நீக்கிப் புதிதாகச் சோழகுல நாராயணச் சதுர்வேதி மங்கலம் என்று பெயரிட்டு, வேதத்திலும் சாஸ்திரங்களிலும், அவற்றை விரித்துரைப்பதிலும் வல்ல சதுர்வேதிபட்டர்கள் 130 பேருக்குப் பிரம்மதேயமாகக் கொடுக்கப்பட்டது.

இவனது 35ஆம் ஆட்சியாண்டு, 40 ஆம் நாளில் வெளியிட்ட அரசனின் மற்றோர் ஆணையின்படி, கள்ளார் மங்கலம், கொற்றாங்குடி என்ற இரு ஊர்களையும் அவற்றின் பழைய பெயர் தவிர்த்து, மேற்குறித்த சோழகுல நாராயணச் சதுர்வேதி மங்கலத்தோடும் இணைத்து அதே பட்டர்களுக்கு வழங்கப்பட்டன. (ஏடு 13 முன்பக்கவர் 11–14). இவ்வாணை பல்வேறு அரச நிர்வாக நடைமுறைகளுக்குப் பின்னர் 35, ஆம் ஆட்சியாண்டின் 121 ஆம் நாளில் வரிப்புத்தகத்தில் இடப்பட்டது. அரசன் அவனது 35–ம் ஆட்சியாண்டில் நூறாம் நாளில் கங்கைகொண்ட சோழபுரத்தில் முடி கொண்ட சோழன் அரண்மனையில் தென்புறமுள்ள மனறவிடத்தில் ஆடை உடுத்திக் கொண்டிருந்தபோது, விக்கிரமசோழ பாண்டியன் மேற்படி ஊர்களை இறையிலியாக்கிட் தரவேண்டுமெனச் சொல்லசியதற்கிணங்க அவை இறையிலியாக்கப்பட்டது. இந்த ஆனண செயறபடுத்தப்பட்ட முறையினையும், ஒவ்வொரு ஊரிலும் இருந்த மொத்த விளச்சல் நிலங்கள், அதிலிடம் பெறும் நன்செய், புன்செய் நிலங்கள், இவையன்றி ஊரின் பல்வேறு காரணங்களுக்கான பயன்பாட்டு நிலங்கள் ஆகியவற்றை மிகச்சரியான அளவுகளுடன் விளக்கமாகத் தெரிவிக்கிறது இச்செப்பேடு. மேலும், அரச ஆணை செயல்படுத்தப்படும் முறைகளை விவரிக்கும் முகத்தான், அரசனுக்கருகே அரண்மனையிலிருந்த அதிகாரிகள், அளந்து வரியிலிடும் அதிகாரிகள் என இரண்டடுக்கு அதிகாரிகளையும் குறிக்கிறது. அதனைத் தொடர்ந்து இவ்வானை திருவந்தளூர் நாட்டு நாட்டார்க்கு அனுப்பப்படுவதையும், அவ்வாறு அனுப்பப்படும்போது அங்கு சென்று பிடிசூழ்ந்து, பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நாட்டி எல்லை தெரித்து அறவோலை செய்ய, அரண்மனையிலிருந்து திருமுகத்துடன் அனுப்பப்படும் அதிகாரிகளையும், திருவிந்தளூர் அதிகாரிகளையும், சாட்சியாக உடன் நின்று கையெழுத்திட்டவர்கள் வரை அனைவரையும் குறிப்பதன் மூலம் நிர்வாக நடைமுறையினையும் தெளிவாகச் குறிப்பிடுகிறது செப்பேட்டின் முதறப்குதி.

முதலாம் இராஜாதிராஜன் தானமாக கொடுத்த முக்கிய ஊர்களும் நில அளவுகளும், இராஜாதிராஜ வளநாட்டுத் திருவிந்தளூர் நாட்டிலமைந்த ஊர்கள்

**1. உதத்தமங்கலம்**

மொத்த நிலம் நாற்பத்தேழே முக்காலே ஒருமாவரை அரைக்காலே முந்திரிகைக்கீழ் முக்காலே நாலுமாவரைக் காணி முந்திரிகைகீழ் நாலுமா

**நீங்கு நிலம்**

மூன்றே முக்காணிக்கீழ் எட்டுமா (ஊரிக்கை, ஸ்ரீகோயில்)

**மீதியில் நீர் நிலம் (நன்செய்)**

முப்பத்து நாலே முக்காலே இரண்டு மாக்காணி அரைக்காணிக் கீழ் அறுமா முக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

**புன்செய்**

ஒன்பதே முக்கால் மும்மாவரை முந்திரிகைக்கீழ் நாலுமாக்காணி அரைக்காணிக்கீழ் எட்டுமா

**மொத்த விளைநிலம்**

நாற்பத்துநாலே முக்காலே முக்காணி அரைக்காணி முந்திரிகைக் கீழரையே ஒருமாவரைக்காணி முந்திரிகைக் கீழ் நாலுமாஇதன்வழி வரும் நெல்: 2500 கலம்

**2. கூத்தனூர்மொத்த நிலம்**

முற்பத்தெட்டே முக்காலே முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஏழு மாக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

**நீங்குநிலம்**

ஒன்றரையே முக்காணிக்கீழ் அறுமாவரை அரைக்காணி முந்திரிகைக் கீழ் நாலுமா (ஊருக்கை, ஸ்ரீ கோயில்கள்)

**மீதிநீர்நிலம் (விளைநிலம்)**

முப்பத்தேழே காலே அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரைமா அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டுமா. இதன்வழி வரும் நெல்: 2000 கலம்

**3. பஞ்சவநல்லூர்மொத்த நிலம்**

முற்பத்தெட்டே முக்காலே முக்காணி அரைக்காணி முந்திரிகைக்கீழ் ஏழு மாக்காணி அரைக்காணிக்கீழ் முக்காலே ஒருமா.

**நீங்குநிலம்**

ஒன்றரையே முக்காலக்கீழ் அறுமாவரை அரைக்காணி முந்திரிகைக் கீழ் நாலுமா (ஊரிருக்கை, ஸ்ரீ கோயில்கள்)

**மீதிநீர்நிலம் (விளை நிலம்)**

முப்பத்தேழே காலே அரைக்காணி முந்திரிகைக்கீழ் அரைமா அரைக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டுமா இதன்வழி வரும்: நெல் 2000 கலம்

**4. கரம்பைக்குடிமொத்த நிலம்**

ஐம்பதரையே நான்மாவரை யரைக்காணிக்கீழ் நாலுமாக்காணி முந்திரிகைக் கீழரையே இரண்டுமா.

**நீங்குநிலம்**

இரண்டரையே மூன்று மாக்ணிக் கீழ் முக்காலே மூன்று மாக்ககாணி அரைக்காணிக்கம் காட்டுமா, (ஊரிருக்கை, ஊருணி, குளம்)

**முடிவுரை**

இரண்டாம் ராஜேந்திரனால் வெளியிடப்பட்டுயிருக்கும் செப்பேடு தமிழகத்தில் கிடைத்துள்ள ஏன் இந்தியாவிலே பெரியது அளவிலும் எண்ணிக்கையிலும் பெரிதாக விளங்குகிறது. வரலாற்று சிறப்புமிக்க இப்புதை பொருள்களை ஆய்வு செய்வது இன்றியமையாதது. இச்செப்பேடு 2010 ஜூன் மாதத்தில் சிறிய நூலாக வெளிவந்தது. பிறகு தமிழ்நாட்டில் அரசு தொல்லியல்துறை செப்பேட்டின் முழுவதையும் தமிழ், சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம் என பல மொழிகளில் மொழிபெயர்த்து நூலாக வெளியிட்டு உள்ளது.

இச்செப்பேடு கோவை உலக தமிழ் மாநாடு, தஞ்சை பெரிய கோவில் 1000 நிறைவு விழா ஆகிய விழாக்களில் நடைபெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டபோது, உலகமக்கள் இடையே மிகுந்த வரவேற்பை பெற்றது. இது நம் அனைவருக்கும் இச்செப்பேட்டு செய்தி மகிழ்ச்சி அளிப்பதோடு சோழர்கால நிலஅளவீட்டு முறை குறித்தும் அறிய உதவுகிறது.

**மேற்கோள் நூல்கள்**

1. செப்பேடுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை வெளியீடு,சென்னை, தொகுதி 1.
2. சோழர்கால கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைசென்னை.
3. சோழர்கால செப்பேடுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைவெளியீடு, சென்னை
4. தென்னிந்திய கல்வெட்டுகள், தமிழ்நாடு அரசு தொல்லியல்துறைவெளியிடு.. சென்னை.
5. சோழர் கால வரலாறு, தமிழ் வரலாற்றுக் கழகம்
6. சோழர் கால செப்பேடுகள், தமிழ் வரலாற்றுக் கழகம்
7. திருவிந்தளூர் செப்பேடுகள், தமிழ் வரலாற்றுக் கழகம்
8. திருவிந்தளூர் செப்பேடுகள், மாக்கிய காந்தி, தமிழ்நாடு அரசு தொல்லியல்துறை வெளியீடு, சென்னை.
9. சோழர்களின் கொடை வரலாறு. ஐய்யனார், சென்னை.
10. சோழர்களின் வரலாறு, ராஜமாணிக்கம்